

மதுரை கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட சத்திரப்பட்டி, வெளிச்சநத்தம், குலமங்கலம் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் சுமார் 4.70 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 30 மக்கள் நலத்திட்ட பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து, ஏழை எளியோருக்கு இலவச வீட்டு மனை பட்டா மற்றும் கலைஞர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் உடனடியாக வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர், கழக நிர்வாகிகள் சிறைச்செல்வன், நேரு பாண்டியன், ஆசைக்கண்ணன், வீரராகவன், சுரேந்திரன், மருது பாண்டியன், சசிகுமார், கார்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள், பயனாளிகள், அதிகாரிகள் பங்கேற்றனர்


### சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரி வட்டம்

# ந.அம்பலமுத்து - சந்தி சே.இளமாறன் இல்ல மணவிழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - பிரேமா பெரிய கருப்பன் தலைமை!

*சிவகங்கை, ஏப். 20 -*

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், ஹெட்மன் இரா.நடராஜன் அம்பலம் - பூரணம் அம்மாள் இவர்களின் மகன் வழிப்பேரனும், சிங்கம்புணரி வட்டம், சந்தி இரா. சேது அம்பலம் மாலதி இவர்களின் மகள் வழிப் பேரனும் ந.அம்பலமுத்து- மிதிலாதேவி இவர்களின் புதல்வனுமான அ.நடராஜனுக்கும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம் சந்தி இரா.சேசு அம்பலம் - மாலதி அம்மாள் ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், சிங்கம்புணரி சே.ஜெகதீசன் அம்பலம் - சுந்தர மீனா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும் சந்தி சே. இளமாறன் - சுகன்யா, (எ) பவானி ஆகியோரின் புதல்வியுமாகிய இ. நந்தானாவுக்கும் மணவிழா (09.05. 2025 - வெள்ளிக்கிழமை)



அன்று காலை 9 மணியளவில் சிங்கம்புணரி மணப்பட்டி காந்திமதி கோல்டன் பேலஸில் கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன், பிரேமா பெரிய கருப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இராம.அருணகிரி, கே.பி.நவநீதி கிருஷ்ணன், த.சேங்கைமாறன், எம்.வெற்றிச்செல்வி, டாக்டர் ஆர். முருகன், பி.அமலநாதன், எம்.பூமிநாதன், எம்.ராஜா முகமது, இந்தியன் டி.செந்தில்குமார், ஆர். சிவகுமார், ஆர்எம் எஸ்.சரவணன், ஹாஜி. ஏ.எம்.முகமது உசேன், சி.வெங்கட்ராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நகரச் செயலாளர் டி.கதிர் வேல் வரவேற்கிறார். சிவபுரி எஸ். சேகர் நன்றி கூறுகிறார்.

மணவிழாவில் அ.கணேசன், அஞ்சப்பர் ஜெயராமன், பூரண சங்கீதா, எம். சோமசுந்தரம், ஏ.பாஸ்கரன், பி.ஆர்.பெருமாள், எஸ்.சண்முகவடிவேல், கே.பால சுப்பிரமணியன், கதி.ராஜ்குமார், கே.எஸ்.நாராயணன், என்.எம்.சுரேஷ், ஆர்.புகழேந்தி, க.செந்தில் கிருஷ்ணன், கரு.சண்முகம், எம். பிரகாஷ், ஏ.எல்.சந்திரன், ஆபிள்முராதுகான், ஆர். ராஜாங்கம், எஸ். முத்துக்குமார், எஸ்.பி.சுப்பிரமணியன், டாக்டர். இ.அருள்மணி நாகராஜன், எஸ்.நாகராஜன், ஆர். ஆனந்த், ஜி.ராஜமூர்த்தி, ஜி.மருது பாண்டியன், கே.முருகேசன், எஸ்.எம். எஸ்.ராஜ்குமார், கே.கே.கரந்தமலை, ப.கதிர்காமம், குடோன் பாண்டி, டி.சி. என்.ஞானசேகரன், சி. தனுஷ்கோடி, ஏ.மனோகரன், சி.பூமிநாதன், சி. சின்னையா, ஷீலா சொக்கநாதன், எஸ்.கல்யாணசுந்தரம், எம்.எஸ்.ஒய்.அலாவுதீன் யாகூப், லோகநாதன், ஆ.சையது, அக்ரி கே.ஆர். சுப்பிரமணியன், கே அருண் பிரசாத் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.


முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 20 2025

கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் வாளமாபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும்/ திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகப் பொருளாளராகவும் மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் / ஒன்றிய விவசாய அணி அமைப்பாளராகவும் என பல்வேறு பொறுப்புகள் வகித்த

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவரும்/ 1980–ஆம் ஆண்டு இவர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கழகமே தனது உயிர் மூச்சாக வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடி - வாளமாபுரம்



V.R.M (எ) V.R.முருகேசன்

மண்ணின் மைந்தருக்கு, மாசற்ற மாணிக்கத்திற்கு, எங்கள் இதய தெய்வத்திற்கு உளப்பூர்வமான நமஸ்காரங்கள். என்றும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நினைவுகூர்ந்து, அவர்கள் காட்டிய பாதையில் நினைவுகளுடன் வாடும்

மனைவி: மோகனா முருகேசன்

மகன் - மருமகள்: Mu.ரெத்தினபாண்டியன் - தமிழ்ச்செல்வி ரெத்தினபாண்டியன்

மகள் - மருமகன்: S.ரெத்தினகல்யாணி - K.செந்தில் குமார்

பேரக்குழந்தைகள்: S.R.ராகவேந்திரா, R.ஹர்ஷிதா, R.ஹன்சிகா ஸ்ரீ

குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் - வாளமாபுரம், திருத்துறைப்பூண்டி


### தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கான

# ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச்செயலாளர், தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கை!



*தேனி, ஏப்.20-*

தேனி வடக்கு மாவட்ட கழக பொறியாளர் அணிக்கான ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கு 20.04.2025 ஞாயிற்றுக் கிழமை நேர்காணல் நடைபெறும் என தேனி வடக்கு மாவட்டச் செயலாளர், தேனி நாடாளுமன்ற உறுப்பினர், தங்க தமிழ் செல்வன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு:

கழகத்தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி, மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா வழிகாட்டுதலின்படியும், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான.கலை.கார்திகேயன் அவர்களின் தலைமையிலும், தேனி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும்

ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தேனி வடக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாநில பொறியாளர் பொறியாளர் அணி செயலியின் மூலம் பதிவு செய்தவர்கள் மேற்கண்ட நேர்காணலில் பங்கேற்கும்படியும். கழகத்தினரும்,

இந்நிகழ்வில் பங்கேற்கும்படியும் தேனி வடக்கு மாவட்டக் கழகச்செயலாளர், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பகுதி,

# பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



*தூத்துக்குடி, ஏப்.20-*

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.க பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான பொறுப்புகளுக்கு பொறியாளர் அணி QR கோடு மூலம் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் இன்று 20.04.2025 காலை 9.30 மணிக்கு பாளையங்கோட்டை சாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிர்புறம் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன்) தலைமையிலும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பி.அன்பழகன், மாவட்ட அமைப்பாளர் சி.எஸ்.ஆனந்த் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

BE டிப்ளமோ, ஐ.டி.ஐ போன்ற பொறியியல் துறை சார்ந்த படிப்புகளை நிறைவு செய்துள்ள, படித்துக் கொண்டிருக்கின்றவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம். அண்ணாமலை

ஏப்ரல் 20 (1997)



சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர்.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். கலைஞர் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத காலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார், அண்ணா அறிவித்த அறப்போராட்டங்களிலும் – தலைவர் கலைஞர் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறைப் பறவையாக விளங்கியவர்.

இயக்கக் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா, கலைஞர் ஆகியோர் நடத்திய நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சொக்கலிங்கம்

ஏப்ரல் 20 (2000)



தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.

மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.